**பக்கம் 1:**
மனித கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கான
அகில உலக ஜெப நாள் 2023

# நான்
# அவர்கள் விண்ணப்பத்தை
# கேட்டேன்

பெரியவர்களுக்கான பிரசங்க ஆதாரம்     எழுதியவர் கமிஷனர் பிரேமா வில்பிரட் (**R**) பெரியவர்
*இந்திய தென்மேற்கு மாகாணம்*

## வரிசை 1:

## அறிமுகம்

நவீன அடிமைத்தனமும் மனித கடத்தலும் பல பில்லியன் டாலர் மதிப்புள்ள குற்ற தொழிலாகும் இது உலகம் முழுவதிலும் 49.6 மில்லியன் மக்களின் சுதந்திரத்தை மறுக்கிறது. அது பெண்கள், ஆண்கள், சிறுமிகள் மற்றும் சிறுவர்களை பல வகையான வேலைகள் மற்றும் பாலியல் கடத்தல் மற்றும் கட்டாய திருமணத்திற்கு தள்ளுகிறது.

இன்று உலகம்முழுவதும் நவீன அடிமைத்தனமும் மனித கடத்தலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக இந்த ஜெபத்தில் இனைவதின் மூலம் அவர்களுக்கான போராட்டத்தில் ஒன்றினைந்து நிற்கிறது. நாம் இப்படிபட்ட மக்களுக்காக ஜெபிக்கவும் மற்றும் சபை இதற்கெதிராக போராட எழுந்து நிற்கவும் வேண்டும். நவீன அடிமைத்தனம் மனித கடத்தலை முடிவுக்கு கொண்டுவரவும் இந்த அநீதியால் பயனடையும் கடத்தல்காரர்கள் மற்றும் சுரண்டல்காரர்களுக்காகவும் ஜெபிக்க விரும்புகிறோம்.

வுரிசை 2 :

நாம் ஜெபத்தில் ஈடுபட ஆயத்தமாகும்போது, யாத்திராகமத்தின் ஆரம்பத்தில் குறிப்பாக யாத்திராகம் 2:23-25 ல் இஸ்ரவேலரின் ஆரம்பகால அடிமைதனத்தின் நிலையை, அடிமைதனத்தின் இருளிலிருந்து அவருடைய ஒளிக்கு கர்த்தருடைய இருதயம் எப்படி கொண்டுவந்தது என்பதை பார்க்க போகிறோம்.

யாத்திராகமத்தின் ஆரம்பம் அந்த நேரத்தில் இஸ்ரவேலர் அனுபவித்து கொண்டிருந்த போராட்டம், நெருக்கம் மற்றும் அடிமைதனத்தின் சூழ்நிலையை அறிந்துகொள்ள

உதவுகிறது.இந்த அன்னிய தேசத்தில் இஸ்ரவேலர்களின் வரலாறை திரும்பி பார்க்கும்போது, தன் சகோதரர்களால் அடிமையாக விற்க்கப்பட்ட யோசேப்பை காணலாம்.

அடிமைத்தனம் என்பது ஒருவர் மற்றொருவரை தன் பொருளாகவோ உடமையாகவோ நினைத்து கட்டுப்படுத்துவது ஆகும். அது மிரட்டிழயோ உடல்ரீதியான வன்முறை மூலமோ, உணர்ச்சி, உளவியல் மற்றும் ஆன்மீக ரீதியிலோ இருக்கலாம்.

அடிக்குறிப்பு:

1. பெரியவர்களுக்கான பிரசங்க ஆதாரம்

பக்கம் 2:
வரிசை 1

மக்கள் அடிமைத்தனத்தை அனுபவிக்கும்போது சுரண்டபடுகிறார்கள். அது அவர்கள் மற்றொருவரின் சுயநலம் மற்றும் இலாபத்திற்காக நியாயமற்ற முறையில் நடத்தபடுவதை குறிக்கிறது.

அடிமைபடுத்தபட்ட மக்கள் மனிதாபிமற்ற முறையில் மற்ற பொருட்களை போல நடத்தப்படுகிறார்கள். அவர்களுடைய அடையாளமும் தெரிவு செய்யும் திறனும் பறிக்கப்பட்டிருக்கும். அவர்கள் வாழ்க்கை கட்டுப்படுத்தபட்டதாக காணப்படும். அவர்களுடைய நம்பிக்கை, கனவு, அன்பிற்குரியவர்கள், அவர்களுடைய கடந்த காலம் மற்றும் எதிர்காலத்தை தியாகம் செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். அவர்களுடைய வேலைக்கான சம்பளம் அவர்கள் வாழ்வதற்கு போதுமானதாக இல்லை. இது அவர்களுடைய சுதந்திரம் மற்றும் மனித உரிமைகளை பறிக்கிறது.

பார்வோனுக்கு அடிமையாக இருந்ததின் நிமித்தமாக யோசேப்பு கடினமான சூழ்நிலைகள், வலிகள் மற்றும் நெருக்கத்தை அனுபவித்த போதிலும் கடவுள் யோசேப்பின் வாழ்க்கையில் ஒரு திட்டத்தை வைத்திருந்தார். கடவுள் யோசேப்பை விடுவித்து எகிப்தின் உயர்ந்த தலைவராக மாற்றினார். பஞ்சகாலத்தில் யோசேப்பு தன் சகோதரர்களை மன்னித்து எகிப்தில் குடியிருக்க உதவினார். யோசேப்பின் மறைவிற்கு பிறகு புதிய பார்வோன் அதிகாரத்திற்கு வந்தார், எகிப்தியர்கள் எபிரேயரின் பெருக்கத்தை கண்டு பயந்து அவர்களின் ஆண் குழந்தைகளை கொன்றனர்.

ஆனால் கடவுள் தன் திட்டத்திற்காக மோசேயை காப்பாற்றினார். இஸ்ரவேலர்கள் அதிக எண்ணிக்கையில் பெருகுவதை கண்ட எகிப்பியர்கள் அவர்களை அடிமைகளாக்கி கட்டாய வேலை செய்ய வைத்தனர். இஸ்ரவேலர்கள் எகிப்தின் குடிமக்களாகி அந்த நாட்டை கட்டி வளர்ச்சியடைய செய்தனர். அவர்கள் நீண்ட நாட்களாக மனிதர்களாக கருதபடாமல் அவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டிருந்தது. அவர்கள் ஒடுக்கப்பட்டிருந்தனர் - அவர்கள் வாழ்க்கை கடினமாக நீதியற்ற நிலை, சமத்துவமின்மை, வலி மற்றும் கசப்புகளால் நிறைந்திருந்தது. அங்கே பார்வோனின் அதிகாரத்திற்கும் நீதிக்கான போராட்டத்திறந்கும் நேரடியான சவால் இல்லை. வலி

மற்றும் கசப்புகளிலிருந்து அவர்கள் அடிமைதனத்திலிருந்து பெருமூச்சுகளோடு கர்த்தரிடம் முறையிட்டார்கள். (யாத்திராகமம் 2:23)

**வுரிசை 2** :
அதிகாரம் 2:24-25 இஸ்ரவேலரின் விண்ணப்பத்திற்கு கடவுள் பதிலளித்ததை விளக்குகிறது. அவரது பதில் மூன்று சிறிய வார்த்தைகளில் குறிப்பிடலாம்: அவர் அவர்களின் முறையீட்டை கேட்டார், கர்த்தர் அவர் உடன்படிக்கையை நினைவுகூர்ந்தார், அவர்களுக்காக கவலைப்பட்டார். அந்த மூன்று பதில்களையும் பார்ப்போம்.

**கர்த்தர் அவர்களின் முறையீட்டை கேட்டார்**

புதிய உலக பதிப்பில் பெருமூச்சு என்ற வார்த்தை யாத்திராகமம் 2:23ல் பயன்படுத்தப்பட்டுள்ளது அது அழுகையோடு தொடர்புடையதாக இருக்கிறது.. பழைய ஏற்பாட்டில் பெருமூச்சு என்ற வார்த்தை மூன்று முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. யாத்திராகமம் 6:5, நியாதிபதிகள் 2:18 மற்றும் எசேக்கியல் 30.20. இஸ்ரவேலர்கள் பெருமூச்சுகளோடு விண்ணப்பம் பண்ணினார்கள் ஏனென்றால் இஸ்ரவேலர்கள் அடிமைத்தன வேலைபளுவின் காரணமான உடல்ரீதியாக பாதிக்கப்பட்டு பெருமூச்சுகளோடு விண்ணப்பம் பண்ணினார்கள். அந்த நேரத்தில் எபிரேயர்களிடத்தில் தலைவர் இல்லை. அவர்கள் நம்பிக்கையற்றவர்ளாக உதவியற்றவர்களாக இருந்தனர். ஒரே ஒரு காரியம் அவர்கள் கர்த்தரிடம் முறையிட்டார்கள். அவர்களின் விண்ணப்பம் இந்த உலகத்தையும் மனித குலத்தையும் படைத்த கடவுளிடம் சென்றது மற்ற கடவுள்களிடம் அல்ல. அவர்களின் முற்பிதாக்களின் கடவுளிடம் முறையிட்டனர். வேதாகமம் முழுவதும் கர்த்தர் தம் ஜனத்தின் விண்ணப்பத்தை எப்படி கேட்கிறார் என்பதை கற்றுக்கொள்கிறோம்.

1 பேதுரு 3:12 "கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் இவர்கள் வேண்டுதலுக்கு கவனமாயிருக்கிறது. தீமை செய்கிறவர்களுக்கோ கர்த்துருடைய முகம் விரோதமாயிருக்கிறது"

சங்கீதம் 50:15 ஆபத்துகாலத்தில் என்னை நோக்கி கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைபடுத்துவாய்

சங்கீதம் 34:17 "நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு, அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரங்களுக்கும் நீங்கலாக்கிவிடுகிறார்" இந்த குறிப்பிட்ட வேத வசனங்கள் கர்த்தர் தம் ஜனத்தின் விண்ணப்பத்தை கேட்கிறார் என்பதை காண்பிக்கிறது. அவர் வனாந்திரத்தில் ஆகாரின் கூப்பிடுதலை கேட்டார் மற்றும் பலரின் வேண்டுதலை கேட்டிருக்கிறார். அவர் ஆகார் மற்றும் பிறரின் கடினமான சூழ்நிலைகளில் அவர்களை சந்தித்து காப்பாற்றியிருக்கிறார். அதே கடவுள் இன்றும் நம் விண்ணப்பத்தை கேட்கிறவராயிருக்கிறார்.

அடிக்குறிப்பு:
2. பெரியவர்களுக்கான பிரசங்க ஆதாரம்

பக்கம் 3:
வரிசை 1:

கர்த்தர் அவர் உடன்படிக்கையை நினைவுகூர்ந்தார்

கடவுள் கேட்டது மட்டுமல்ல தாம் ஆபிரகாமோடும் ஈசாக்கோடும் யாக்கோபோடும் செய்த உடன்படிக்கையை நினைவுகூர்ந்தார் '(யாத்திராகமம் 2:24). நினைவுகூர்தல் எபிரேயத்தில் சக்கர் ஆகும். இது யாத்திராகமம் புத்தகத்தின் இறையியல் கருப்பொருளாகும். எபிரேயத்தில் நினைவுகூர்தல் என்பது அறிவார்ந்த பயிற்சி மட்டுமல்ல ஞாபகத்தில் கொள்ளுதல் என்பதாகும். கர்த்தர் ஆபிரகாமுக்கும் அவர் சந்ததிக்கும் நிபந்தனையற்ற வாக்குறுதி கொடுத்திருந்தார். அவர் உண்மையுள்ளவர். நீண்ட காலமானாலும் தன் வாக்குறுதியை நிறைவேற்றுபவர்." அவருடைய நேரத்தில், அவருடைய நேரத்தில், எல்லாவற்றையும் அழகான உருவாக்கியிருக்கிறார் அவருடைய நேரத்தில்" இந்த அழகான வரிகள் அவருடைய வேளை வரும்போது அவர் தம் ஜனங்களை நினைவுகூர்வார் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. ஆவர் ஒருபோதும் மறக்ககூடியவர் அல்ல. சங்கீதம் 105:8 ஆயிரம் தலைமமுறைக்கென்று அவர் கட்டளையிட்ட வாக்கையும், அவர் பண்ணின உடன்படிக்கையையும் என்னென்றும் நினைத்திருக்கிறார். என்பதை தெரிவிக்கிறது. அவர் தலைமுறை தலைமுறையாக தம் ஜனங்களை நினைத்திருக்கிறார். அடிமைத்தன அனுபவத்திலிருக்கிற அனைவரையும் நினைத்திருக்கிறார். கடவுள் ஜனங்களை எல்லாவிதமான அடித்தனத்திலிருந்து முழுவதுமாக விடுவித்து இரட்சிப்பை கொடுக்கிற தேவனாயிருக்கிறார்.

**கடவுள் அக்கறையோடிருக்கிறவர்**

கடவுள் கேட்பவர் மற்றும் நினைவில்கொள்ளுபவர் அல்ல மாறாக அக்கறைகொள்பவர். இஸ்ரவேலின் தேவன் அவர்களின் நிலையை அறியாதவரோ அடிமைதனத்திலிருந்து காப்பாற்ற விரும்பாதவரோ அல்ல.

**வரிசை 2 :**
அவர் தனது ஜனங்களை எகிப்தின் அடிமைதனத்திலிருந்து விடுவிக்க திட்டமிட்டார்.˙ கேட்பது மற்றும் நினைவில்கொள்ளுதல் மற்றும் அக்கறைகொள்ளுதல் அவரின் உண்மையையும் தன்னுடைய படைப்பின் மீதான கருணையையும் காண்பிக்கிறது.

சங்கீதம் 146:6-9 ல் சொல்லியபடி, "அவர் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவையும் உண்டாக்கினவர். அவர் என்றென்றைக்கும் உண்மையை காக்கிறவர். அவர் ஒடுக்கப்பட்டவர்களுக்கு நியாயம் செய்கிறார் பசியாயிருக்கிறவர்களுக்கு ஆகாரம் கொடுக்கிறார். கட்டுண்டவர்களை கர்த்தர் விடுதலையாக்ககிறார். குருடரின் கண்களை திறக்கிறார். மடங்கடிக்கப்பட்டவர்களை கர்த்தர் துக்கிவிடுகிறார். நீதிமான்களை கர்த்தர் சிநேகிக்கிறார். பரதேசிகளை கர்த்தர் காப்பாற்றுகிறார். அவர் திக்கற்ற பிள்ளைகளையும் விதவையும் ஆதரிக்கிறார். துன்மார்க்கரின் வழியையோ கவிழ்த்து போடுகிறார்.

நம்முடைய ஜெப நிலைகளுக்குள்ளாக ஜெப நேரத்தில் செல்லும்போது, யாத்திராகமத்தின் ஆரம்பத்தை படித்து யாத்திரராகமம் 2:23-25 வரும்போது கடவுள் அடிமைத்தனம், மனித கடத்தல் மற்றும் சுரண்டலை அங்கிகரிக்கவில்லை என்பதை பார்க்கலாம். நம் ஆண்டவர் இந்த அநீதியை அனுபவிக்கும் அனைத்து மக்கள் மீதும் அக்கறை கொண்டவர். அவர் தனது சாயலாக ஒவ்வொருவரையும் படைத்திருக்கிறார் மற்றும் மனிதன் சுதந்திரமாக இருக்கவே விரும்புகிறார். இந்த அநியாயமான இருளிலிருந்து வெளிச்சத்திற்கு கொண்டு வருவதே அவரது இதயம். ஜெப நிலைகளில் அடிமைத்தனம், மனித கடத்தல் மற்றும் சுரண்டலை அனுபவிக்கும் மக்களுக்காக அவரது இருதயம் மற்றும் பதிலுக்காக ஜெபிப்போம்.

இரண்டு பக்கங்களில் :

அடிமைதனத்தால் பாதிக்ப்பட்ட அனைவரையும் அவர் நினைத்திருக்கிறார். கடவுள் ஜனங்களை எல்லாவிதமான அடித்தனத்திலிருந்தும் விடுவிக்கிற தேவனாயிருக்கிறார்.

அடிக்குறிப்பு:

3. பெரியவர்களுக்கான வேதபாட ஆதாரம்